மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தேசிய அபிவிருத்திக் கவுன்சில் கூட்டத்திற்குச் செல்கிறவர்கள் முதல் அமைச்சர் அவர்கள். அவரைத்தான் கேட்கவேண்டும். அப்படி ஒன்றும் இந்த அரசுக்குத் தகவல் இல்லை. அரசாங்கமே ஏற்று நடத்தவேண்டுமென்ற கொள்கை முழு அளவிற்கு இப்போது ஏற்றுக்கொள்ளவில்லை.

Quarters for staff of Industrial Training Centres.

* 583 Q.—THIRU K. T. K. THANGAMANI: Will the Hon. the Minister for Industries be pleased to state whether it is a fact that there are no adequate quarters for the staff in Industrial Training Centres?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை. தமிழ் நாட்டில் உள்ள 31 தொழிற்பயிற்சி நிலையங்களில் 22 நிலையங்களில் பணியாற்றுவோருக்கு குடியிருப்புகள் கட்டித் தரப்பட்டுள்ளன. கிண்டி மற்றும் வட சென்னையில் உள்ள நிலையங்கட்கும், சென்னை மகளிர் தொழிற்பயிற்சி நிறுவனத்திற்கும் சென்னை நகர் எல்லைக்குள் உள்ள படியால் தனியே குடியிருப்புகள் கட்ட வேண்டுவதில்லை என்று தீர்மானிக்கப்பட்டது. மீதமுள்ள 6 நிலையங்கட்கு ஊழியர் குடியிருப்புகள் கட்டும் யோசனை நிதி நிலைமை இடங்கொடுக்கும் பொழுது எடுத்துக்கொள்ளப்படும்.

வேலை வாய்ப்பின்மை குறித்த வல்லுநர் குழு

*584 வின—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

தமிழ் நாட்டில் உள்ள வேலைவாய்ப்பு நிலைமைகளை ஆராய்ந்து ஆவன செய்ய நிபுணர் குழு ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: வேலைவாய்ப்பின்மை குறித்த ஆய்வு செய்ய வல்லுநர் குழு ஒன்றைத் தொழிலாளர் நலத் துறையின் 17—9—71 நாளிட்ட 1175-ஆம் எண் ஆணையில் அரசு அமைத்துள்ளது. மேற்படி ஆணையின் நகல் @ ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

@ 154–157-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப் பட்டுள்ளது.